## உதயநிதி ஸ்டாலின் - சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி மக்களுக்கு நன்றி!





கழக இளைஞரணிச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தான் வெற்றி பெற்ற சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி மக்களை நேற்று (11.5.2026) சந்தித்து நன்றி தெரிவித்தார். உடன் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதிச் செயலாளர் மதன் மோகன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### புதிய முதல்வருக்கு வாழ்த்துகள்! எதிரிக்கட்சியாக இல்லாமல்

# நல்ல எதிர்க்கட்சியாக மக்களின் குரலை எதிரொலிப்போம்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, மே.12-**

**“தமிழ்நாட்டின் புதிய அரசுக்கும் - முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள விஜய் அவர்களுக்கும் என் வாழ்த்துகள்” என சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு :-

இந்த நேரத்தில், 17–ஆவது தமிழ்நாடு சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றும் பெரிய பொறுப்பை எனக்கு வழங்கியிருக்கும் கழகத்தலைவர் – எங்கள் உயிரான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழகப் பொதுச்செயலாளர் மற்றும் கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகள், எல்லாவற்றுக்கும் மேல் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான நன்றி!

கழகத்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சட்டமன்றத்திலும் – மக்கள் மன்றத்திலும் – சமூக ஊடகங்களிலும் ஆற்றல்மிகு எதிர்க்கட்சியாக மக்களின் குரலை நாங்கள் எதிரொலிப்போம்.

ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன்வைப்போம்.

எங்கள் தலைவர் சொன்ன மாதிரி, எதிரிக்கட்சியாக இல்லாம, ஒரு நல்ல எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம்.

மக்களுக்கும் – அரசுக்கும் இடையிலான ஊடகமாக நாங்கள்தான் இனி இருப்போம்.

என் மேல நம்பிக்கை வைத்து மக்கள் கொடுத்திருக்கும் இந்தப் பொறுப்புக்கு நான் 100% உண்மையாக இருப்பேன்.

கடுமையாக உழைப்பேன்!

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கே.ஜி. கண்டிகை கிராமத்தில் ஒன்றியச் செயலாளர் கே.ராஜேந்திரன், ஏற்பாட்டில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் நீர் மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு குடிநீர் இளநீர், தர்பூசணி, கிருனி பழம் குளிர்பானங்கள் ஆகியவற்றை வழங்கினார். உடன் ஒன்றியக் கழக நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தெற்குப் பகுதி, சேத்துப்பட்டு, கே.டி.எம். தேநீர் நிலைய உரிமையாளர் தாமஸ்ராஜின் இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு, மணமக்கள் சுஷில் – ஜுஹி இணையரை வாழ்த்தினார்.

இதுவரை ரூ.6 கோடியே 47 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 47 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 11-05-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பி. சாந்தி, ஆவிக்கோட்டை, கீழக்குறிச்சி, பட்டுகோட்டை, தஞ்சை மாவட்டம் | – 25,000/– |
| 2. | சி. தங்கப்பா, கோவில் வெண்ணி, நீடாமங்கலம் தாலுக்கா, திருவாரூர் | – 25,000/– |
| 3. | எஸ்.ஆறுமுகம், கிட்டாம்பாளையம், சூலூர் வட்டம், கோவை மாவட்டம். | – 25,000/– |
| 4. | வ.சிக்கந்தர், வடகரை, பெரியகுளம், தேனி மாவட்டம் | – 25,000/– |
| 5. | கே. பழனிச்சாமி (எ) குட்டி, சிவகிரிபட்டி,பழனி வட்டம்,திண்டுக்கல் மாவட்டம் | – 25,000/– |
| 6. | கே.நெல்லையப்பன், பாரதி நகர், ஊத்துமலை, வீரகேரளம்புதூர், தென்காசி | – 25,000/– |
| 7. | கே.ஞானசெல்வம், பெரப்படி, கண்டிரமாணிக்கம், கும்பகோணம், தஞ்சை | – 25,000/– |
| 8. | எஸ்.ரெங்கராஜ், வெள்ளையப்பன் தெரு, போடி, தேனி மாவட்டம். | – 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

### சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் குழாய் இணைக்கும் பணி:

# மயிலாப்பூர் கழிவுநீர் உந்து நிலையம் செயல்படாது!

## சென்னை குடிநீர் – கழிவுநீரகற்று வாரியம் தகவல்!

*சென்னை, மே 12-*

*சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) சார்பில், தேனாம்பேட்டை மண்டலம், இராமகிருஷ்ணா மடம் சாலையில் (மந்தைவெளி பேருந்து பணிமனை அருகில்) பிரதான கழிவுநீர் குழாய் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 13.05.2026 அன்று காலை 10 மணி முதல் அன்று இரவு 10 மணி வரை (12 மணி நேரம்) மண்டலம் - 9 -க்குட்பட்ட தெற்கு மயிலாப்பூர் கழிவுநீர் உந்து நிலையம், சீதாம்மாள் காலனி கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் மந்தைவெளிப்பாக்கம் கழிவுநீர் உந்து நிலையம் தற்காலிகமாக செயல்படாது.*

*எனவே, தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட இடங்களில் கழிவுநீர் தொடர்பான புகார்களுக்கு கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.*

*மண்டலம் - 9 (தேனாம்பேட்டை) - 8144930909 - 8144930225 - ஆழ்வார்பேட்டை, நந்தனம், அபிராமபுரம், இராஜா அண்ணாமலைபுரம், மயிலாப்பூர், சாந்தோம், மந்தைவெளி.*

*இவ்வாறு சென்னை குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.*



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருமழிசை பேரூர் திமுக சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா பேரூர் செயலாளர் தி.வே.முனுசாமி தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு மோர், பழரசங்கள், இளநீர், தர்பூசணி, கிருணிப்பழம், குளிர்பானங்கள் ஆகியவற்றை வழங்கினர் உடன் ஆ.கிருஷ்ணசாமி, கே.ஜெ..ரமேஷ். மாவட்ட துணை செயலாளர் காயத்திரி ஸ்ரீதர், ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ். பேரூராட்சி தலைவர் ஜெ.மகாதேவன், நிர்வாகிகள் தி.கோ.செல்வம், வேந்தன், அருள், சுரேந்தர், எழிலரசன், சங்கர், இளங்கோவன். டி.கே.வேலு, ஜான் மேத்யூ, பிரபாகரன், பாலமுருகன். வெங்கடேசன், பன்னீர்செல்வம், ரேவதி. நாகராஜ், மோகன்ராஜ், ராஜா, தாமோதரன், அன்பு, தரணிபிரசாத், ஆனந்தராஜ். கோபு. முரளி, கோகுல், மோகன், உள்பட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.